# கொழும்பு மாநகர சபை
# மாநகர பொறியியலாளர்கள் திணைக்களம்
# கேள்வி கோரல்

பின்வரும் வேலைக்கு இரட்டைப்பிரதிகளில் என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | சேவையின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமை | VAT & NBT உட்பட மீளப்பெற முடியாத பத்திரக் கட்டணம் ரூபா சதம் | கேள்விப்பிணையின் பெறுமதி ரூபா சதம் | விபரங்களுக்கு தொடர்பு உத்தியோகத்தர் |
|---|---|---|---|---|---|
| 01) | பின்வருவனவற்றுக்கு கட்டிட சேவைகள், ஆலோசக சேவைகள் பெற்றுக்கொள்ளல்<br>1. உத்தேச உறுப்பினர்கள் தங்கும் அறை, ஒற்றை யன்னல் கருமபீடம், குளியலறைகள்<br>2. சபை மண்டபத்தை மெருகேற்றல் | இலங்கை பொறியியலாளர்கள் நிலையத்தினால் வெளியிடப்பட்ட கட்டிட சேவைகள் விபரக்கொத்தில் பதிவு செய்யப்பட்ட தகைமை பெற்ற கட்டிட பொறியியலாளர்களைக் கொண்ட தனிப்பட்டவர்கள் நிறுவனங்கள், கம்பனிகள் | 2,340.00 | 300,000.00 கோரிக்கையின் பேரில் நிபந்தனையற்ற உத்தரவாதம் | பணிப்பாளர் பொறியியல் (TDRS) தொலைபேசி: 011 - 2694593 |
| 02) | பின்வருவனவற்றுக்கு தொகை மதிப்பீட்டு ஆலோசக சேவைகள் பெற்றுக்கொள்ளல்<br>1. உத்தேச உறுப்பினர்கள் தங்கும் அறை, ஒற்றை யன்னல் கருமபீடம், குளியலறைகள்<br>2. சபை மண்டபத்தை மெருகேற்றல் | இலங்கை தொகை மதிப்பீட்டாளர்கள் நிலையத்தின் கூட்டாண்மை அங்கத்துவத்தை கொண்டுள்ள தொகை மதிப்பீட்டாளர்களை வைத்திருக்கும் தனிப்பட்டவர்கள் நிறுவனங்கள், கம்பனிகள் | 2,340.00 | 300,000.00 கோரிக்கையின் பேரில் நிபந்தனையற்ற உத்தரவாதம் | பணிப்பாளர் பொறியியல் (TDRS) தொலைபேசி: 011 - 2694593 |

**கேள்வி மூடப்படும் நேரம் :** 05.10.2018 காலை 10.00 மணி. கேள்விகள் மூடப்பட்ட பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**கேள்விப்பத்திரங்கள் விநியோகம் :** 04.10.2018 காலை 10.00 மணி வரை கொழும்பு - 07 நகர மண்டபத்திலுள்ள மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கோரிக்கையின் செல்லுபடிக்காலம் :** கோரிக்கை 02.04.2019 வரை செல்லுபடியானதாக இருக்கவேண்டும்.

**கேள்விப்பிணையின் செல்லுபடிக்காலம் :** கேள்விப்பிணை 02.05.2019 வரை செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.

**கேள்விப்பெட்டி வைக்கப்படும் இடம் :** மாநகர செயலாளர் திணைக்களம், நகர மண்டபம், கொழும்பு- 07 தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**ஏனைய நிபந்தனைகள் :** (அ) இதற்கென வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக் கப்பட வேண்டும்.

(ஆ) கேள்விப்பத்திர கட்டணத்தை பணமாக செலுத்தியதற்கான ரசீதுடன் அலுவலக கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை கடிதம் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

(இ) மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவில் கட்டணம் செலுத்தாமல் கேள்விப்பத்திரங்களை பார்வையிட முடியும்.

(ஈ) கேள்விகள் மூடப்படும் நேரம் முடிந்தவுடன் அவை திறக்கப்படும். இந்தத்தினம் அரசாங்க விடுமுறை தினமாக பிரகடனம் செய்யப்பட்டால் இதற்கு அடுத்துவரும் வேலைநாளில் காலை 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக திறக்கப்படும்.

(உ) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர் களால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

திரு. V.K.A.அநுர,
மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு - 07.